05.02.2026 OS.No.246/2023 DW3 Name :.தட்சணாமூர்த்தி

குறுக்கு விசாரணை

1. நான் குடியிருக்கும் ஊரும் என் மாமனார் குடியிருக்கும் ஊரும் ஒரே ஊர் ஆகும். இடையில் சுமார் 1 கி.மீ தொலைவு இருக்கும். என்னுடைய மாமனார் இறப்பதற்கு முன் எவ்வளவு நாட்களாக உடல்நிலை பாதிக்கபட்டியிருந்தார் என்றால் அவர் நல்லநிலையில்தான் இருந்தார். என் மாமனாருக்கு பாத்தியபட்ட சொத்திற்கு கிழக்கிலும் மேற்கிலும் அரசு புறம்போக்கு சொத்து உள்ளது என்றால் கிழக்கில் மகாராஜகவுண்டர், சரோஜா சொத்துகள் உள்ளது. மேற்கில் கிருஷ்ணன், பொன்னுசாமி ஆகியோர்கள் சொத்து உள்ளது. தெற்கில் அமாவாசை ராமசாமி கவுண்டர், கண்ணன் ஆகியோர்கள் சொத்து உள்ளது. வடக்கில் ராஜி என்பவர் சொத்து உள்ளது.
2. என் மாமனார் உயிருடன் இருந்த காலத்தில் அவருக்கு சொந்தமான 3 ஏக்கர் சொத்தில் இருந்த கிணற்றிற்கு மின் இணைப்பு வரவில்லை. அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே மின் இணைப்பு வந்துவிட்டது. உயில் ஆவணத்திற்கான தகவல்களை பத்திர எழுத்தரிடம் யார் சொன்னது என்றால் அது எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தை ஏற்கனவே எழுதி தயார் செய்து வைத்திருந்தார்கள். ஏற்கனவே எழுதி வைத்திருந்த உயில் ஆவணத்தில் என் மாமனார் கேட்டுகொண்டதன்படி நான் சாட்சி கையெழுத்து போட்டேன்

என்பதால் உயில் ஆவணத்தை படித்து பார்த்து கேட்டபின்னர் அதை தெரிந்துகொண்டு போட்டேன்.

3. அதன் பின்னர் உயில் ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தார்கள். சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே உயில் பதிவு செய்யபடும்போது நான் சாட்சி கையெழுத்து போட்டேன். சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து உயில் பதிவான பின் உயிலை யார் வாங்கி சென்றுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அதன்பின் நான் உயில் ஆவணத்தை பார்க்கவில்லை. உயில் ஆவணம் என் மாமனார் எழுதியுள்ளதாகவும் அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டதாகவும் தவறாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4. என் மாமனார் உயிருடன் இருந்த காலம்வரை எந்தவொரு உயில் ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உயில் ஆவணம் வழக்கு சொத்தை அபகரிப்பதற்காக மோசடியாக தயார் செய்துள்ள ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. மோசடியான உயில் ஆவணத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 05/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.05 16:36:59 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.